# புதுமுக மாணவர்களுக்கான வரவேற்புத் திருப்பலிப் பாடல்கள்

## 29-11-1998



## வருகையிலே

### *ஆலயம் நுழைவோம் சேர்ந்திங்கே*

ஆலயம் நுழைவோம் சேர்ந்திங்கே
இறைவனின் பலியினில் கலந்திடவே
குருவும் இங்கே வருகின்றார்
ஆசீர் பெற்றிட வாரீர் (2)
ஆலயம் நுழைவோம் சேர்ந்திங்கே

1

இறைமக்கள் நாம் இங்கு ஒன்றாய் இணைவோம்
இறைவழி சென்றிடும் ஒருபாலம் அமைப்போம் (2)
அருள் ஒளி நமக்கிங்கு தெரிகின்றது
மறை வாழ்வின் கதவுகள் திறக்கின்றது (2)
ஆலயம் நுழைவோம் சேர்ந்திங்கே

2

உன்நாமம் உரைத்திட பண் இசை இசைப்போம்
தீப தூப மலரால் துதி செய்வோம் (2)
உன் புகழ் ஓங்கி நிலைபெறுமே
மறைவாழ்வின் இலக்கினை உணர்த்திடுமே (2)

## தியானிக்கையிலே

**ஆண்டவர் எவ்வளவு நல்லவரென்று**

ஆண்டவர் எவ்வளவு நல்லவரென்று
சுவைத்துப் பாருங்கள் (2)

1

ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன்
அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்
என் ஆன்மா ஆண்டவரில் பெருமை கொள்ளும்
சிறுமையுற்றோர் இதைக்கேட்டு அக்களிப்பார்களாக

2

அவரை நோக்குங்கள் மகிழ்ச்சியடைவீர்கள்
வெட்கத்தால் தலை குனிய மாட்டீர்கள்
இதோ திக்கற்றவன் கூவியழைக்க ஆண்டவர்
அவன் குரலைக் கேட்டார்
எல்லாவித நெருக்கடியினின்றும் அவனை விடுவித்தார்

3

சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினிகிடக்கும்
ஆண்டவரைத்தேடுவோர்க்கோ எதுவும் குறைபடாது
ஆண்டவர் எவ்வளவு நல்லவரென்று சுவைத்துப்பாருங்கள்
அவரிடம் தஞ்சம் புகுவோன் பேறு பெற்றவன்

4

உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலே உள்ளார் ஆண்டவர்
மனம் நைந்தவர்களை காக்கின்றார்
ஆண்டவருடையகண்கள் நீதிமான்களை நோக்குகின்றன
தம் ஊழியரின் ஆத்துமங்களை ஆண்டவர் மீட்கின்றார்

## தருகையிலே.....................

### என்னுயிரே என் யேசுவே

என்னுயிரே என் யேசுவே உம்மைப் புகழ்கின்றேன்
என்வாழ்வு மலர சமூகம் மாற
என்னை அர்ப்பணித்தேன்

1

ஊர்கள் தோறும் உனக்காய் செல்லுவேன்
வேர்கள் உன் சொல் என்று சொல்லுவேன் } 2
கார் மேகம் போன்று நல்லன்பைப் பொழிந்து
பிறரை உயர்த்துவேன்
வாழ்வு கொடுத்த இறையே போற்றி
என்னை நீ நடத்திடு
அன்பே எந்தன் வேதம்
வந்தேன் உந்தன் பாதம்

2

அருளால் என்னை உலகில் படைத்திட்டாய்
இருளில் ஒளியை ஏற்ற அழைத்திட்டாய் } 2
நீதியும் அன்பும் இல்லா இவ்வுலகில்
ஒளியை ஏற்றுவேன்
வார்த்தை அளித்த இறையே போற்றி
என்னால் நீ மகிழ்ந்திடு
அன்பே எந்தன் தந்தை
நீயே வாழ்வின் எல்லை

## இணைகையிலே ..................

*தெய்வீகன் . யேசு*

தெய்வீகன் யேசு எம் தெய்வீகமே
தெய்வம்தான் என்றாலும் தேடி எனை வருவான்
தேற்றுவான் வழிகாட்டுவான் அவனே
என் தெய்வீக நண்பன்

1

பாதைமாறி நான் சென்ற போதும் } 2
பேதை போல் நான் வாழ்ந்த போதும்
பரிவுடன் வந்து அணைத்திடுவான்
பண்புடன் வாழ வைத்திடுவான்
குறைவே இல்லை அவன் அன்பில்
நிறைவே என்றும் அவன் அருளில்

உ

தாயும் தந்தையும் வெறுத்த போதும் } 2
தனிமையில் சொந்தங்கள் வதைத்தபோதும்
தயவுடன் வந்து அணைத்திடுவான்
தைரியம் தந்து காத்திடுவான்
குறைவே......................................................

3

சூரியன் ஒளியை மறுத்த போதும் } 2
சூழலும் பூமி நின்ற போதும்
நிலவாய் என்னாளும் ஒளி தருவான்
நின்றாலும் பூமிக்கு உயிர் தருவான்
குறைவே இல்லை....................................

## நன்றி நவில்கையிலே

### நெஞ்சில் சுரக்கும் நன்றி

நெஞ்சில் சுரக்கும் நன்றி ஸ்வரங்கள்
நானிலம் எங்கும் நான் பாட
நந்தவனத்தில் உண்டு களிக்கும்
வண்டுகள் பாடும் பண்போல
விண்ணில் முளைத்திடும் மின்மினியாய்
நெஞ்சில் முளைத்திடும் நல் விதைகள்
விண்ணில் தெறித்திடும் மின்னல்களாய்
கண்ணில் தெரிந்திடும் நம்பிக்கைகள்
நன்மையைக் கண்டேன் நல் எண்ணம் கொண்டேன்
நானிலம் எங்கும் உன் புகழ் சொல்வேன்

1

தோள் அழுத்தும் நுகத்தடியின் விலங்குகளை உடைக்க } 2
தோழமையில் பூமியிலே புது உலகம் படைக்க
நெஞ்சுக்குள்ளே புரட்சிக்கனலை யார் விதைத்தது
கண்ணுக்குள்ளே நெருப்புத்தணலை யார் வைத்தது
அஞ்சாத நெஞ்சமும் அலையாத எண்ணமும்
எல்லாமே நீ தந்தது (௨)

௨

எல்லையில்லா உலகினிலே எனக்கு உயிர் தந்தாய் } 2
எத்தனையோ மனிதர்களை உறவெனவே தந்தாய்
ஈரமுள்ள உறவுகளை யார் தந்தது
இறையரசின் நினைவுகளை யார் தந்தது
புதுயுகத்தின் கனவுகள் புன்னகைக்கும் உறவுகள்
எல்லாமே நீ தந்தது (௨)

## நிறைவினிலே

*என் வாழ்விலே பொன்னான நாளின்று*

என் வாழ்விலே பொன்னான நாளின்று பண்பாடி நான் மகிழ்வேன்

உன்னை நான் பார்த்தாலே போதும்

அது என் பேரின்பமாகும்

1

இரவில் இரவில் இரவில் ஒளியாக வந்தாரே
உறவில் உறவில் உறவில் நண்பன் நான் என்றாரே } 2
உலகத்தில் மேலான அன்பு இதுதான் என்று
உடல் ஆவி எல்லாமே தந்து என்னை மீட்டார்
வானகமுமே வையகமுமே ஒன்றாய் இணைந்தது
நேரில் வந்து இன்று இணைந்தது

2

விழியில் விழியில் விழியில் விளக்காகும் உன் வார்த்தை
வழியில் வழியில் வழியில் துணையாகும் உன் வார்த்தை } 2

நிலையில்லா இவ்வுலகில் எந்தன் வாழ்வு கொஞ்சம்

நீங்காத உன் நினைவு என்றும் அதுவே தஞ்சம்

வானும் மண்ணுமே மாறிப் போனாலும் வார்த்தை மாறாது

தேவனுந்தன் வார்த்தை மாறாது.

"ஆண்டவருக்குப் புதியதொரு
பாடலைப் பாடுங்கள், மகிழ்ச்சிக்
குரலில் நன்றாகப் பாடுங்கள்."

சங்.32:3



வெளியீடு: நல்லாயன் நிலையம்
யாழ் – பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.